# "இலங்கைப் பிரச்சனை சிக்கலானது; தீர்ப்பதற்கு நீண்டகாலம் பிடிக்கும்"

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 15 ஜ: அவ்வல் பிறை: 13 இதழ்: 220

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 01-12-1990

### அமைச்சர் சுக்லா கருத்து

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை மிகச் சிக்கலானது அதனைத் தீர்க்க நீண்ட காலம் பிடிக்கும் என இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. சி. சுக்லா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ந்தும் யுத்தம் நடைபெற்றுவருவதாகவும், இதனை பேச்சுக்களின் மூலமே தீர்க்கவேண்டும் என்றும் திரு. சுக்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேச்சுக்கள் நடாத்த தாம் வெகு விரைவில் இலங்கை செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதற்கிடையில் நாளை மறுதினம் இந்தியப் பிரதமருடன் பேச்சுக்கள் நாடத்த தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி புதுடில்லி செல்லவுள்ளார். (சி)

## துணுக்காய், மல்லாவியில் விமானத் தாக்குதலில் சிறுவன் பலி; ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

துணுக்காய், மல்லாவிப் பகுதிகளில் நேற்று ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் நடாத்திய தாக்குதலில் ஒரு சிறுவன் பலியானார், இருவர் படுகாயமடைந்தனர்.

பொம்மர் விமானங்களுக்கு உதவியாக இரு அவ்ரோ

(4ம் பக்கம் பார்க்க)

# திருமலை மாவட்டத்தில் தமிழ் ஊழியர்கள் வேலை நீக்கம் சிங்களவருக்கு வேலை வாய்ப்பு!

## மாகாண ஆளுநர் நடவடிக்கை

(அலுவலக நிருபர் மா. துரைநாயகம்)

திருமலை மாவட்டத்தில் கடமைக்குச் செல்லாத தமிழ் அரச ஊழியர்களுக்கு வேலை நீக்க கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு சிங்களவர்களை புதிதாக நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

திருமலையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அங்கிருந்து பல ...மிழ் அரச ஊழியர்கள் இடம் ...யர்ந்தார்கள் இந்த தமிழ் ...யர்களை அக்டோபர் 31-ம் ...குள் வருகைதருமாறு ...ப்பட்டனர்.

...தத்திகதிக்குள் கடமைக் ...செல்லாத தமிழ் ஊழியர்கள் அனைவருக்கும் வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனிவிரத்தன வேலை நீக்கக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒரே நேரத்தில்: முப்பத்தாறு பேருக்கு இராசகுளவி கொட்டியது!

[கொழும்புத்துறை]

தொல்புரம் மத்தியில் இராசகுளவி ஒரே நேரத்தில் முப்பத்தாறு பேருக்கு கொட்டியுள்ளது. பனை வடலிக்குள் பெரிய அளவில் கூடு கட்டியிருந்த இராசகுளவி கூட்டிலிருந்து வெளியில் வந்தபோது அவ்வீதியால் மாணவர்கள் விளையாட்டுக்குக் கல்லால் எறிந்தார்கள்.

(4 ம் பக்கம் பார்க்க)

## ...லி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

...கரி பகுதியில் நேற்று ...லாக ஹெலிதாக்குதல் இடம்பெற்றது.

...கரி வாடியடி பகுதி, சங்...பிட்டி பகுதியிலேயே இத்...ாக்குதல்கள் நடைபெற்றது. (83)

## அம்பாறை - மட்டு எல்லையில் தமிழ் ஊர்காவல் படை?

(அம்பாறை)

அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட எல்லைகளில் தமிழ் ஊர்காவல் படையை நியமிக்க அரசு முடிவுசெய்துள்ளது: கொழும்பிலுள்ள தமிழ்இயக்க உறுப்பினர்களையே இவ்வாறு ஊர்காவற்படையாக அரசு நியமிக்கவுள்ளதாம்;

இத்தகவலை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன்விஜேரத்ன தெரிவித்துள்ளார். இதேவேளை அம்பாறை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழரை மீண்டும் அந்தந்தப் பகுதியில் மீள அமர்த்தவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் ஜனுப்

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு தமிழர் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை சின்னவத்தையில் இரு தமிழர்கள் ஸ்ரீலங்கா ராணுவத்தினரால் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப் பட்டார்கள்,

இங்குள்ள அகதி முகாம் ஒன்றில் இருந்த துறைநீலாவணையைச் சேர்ந்த பூபால

(4-ம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரத்தில்: புலிகள் தாக்குதலினால் ராணுவம் பின்வாங்கியது

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நேற்றுப்பகல் மாவிட்டபுரம் பகுதியிலுள்ள ஊரங்கேணிப் பகுதியில் இராணுவம் வெளியேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல்

(4-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களை தமிழரின் காணிகளில் குடியமர்த்த ஏற்பாடு! அம்பாறையில் நடவடிக்கை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் வெளியேறிய தமிழருக்குச் சொந்தமான காணிகளில் முஸ்லிம்களைக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

கல்முனை, பாண்டிருப்பு, வீரமுனை, சொறிகல்முனை ஆகிய இடங்களிலுள்ள தமிழருக்குச் சொந்தமான காணிகளிலேயே முஸ்லிம்கள் குடி

[4-ம் பக்கம் பார்க்க]

## ஷெல் வெடித்து 7 பேர் படுகாயம்

(வேலணை)

நாரந்தனையில் நேற்றுக் காலை ஷெல் வெடித்ததினால் பெண்கள் சிறுவர்கள் உட்பட ஏழுபேர் படுகாயமடைந்தனர்.

நாரந்தனை வடக்கிலுள்ள வீதியோரத்தில் நின்ற பூவரசு மரத்தில் இருந்த வெடிக்காத

(4ம் பக்கம் பார்க்க)

## மனிதஉரிமைகள்மீறப்படுவதுகுறித்து விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்குமாறு கோரிக்கை

(பாரிஸ்)

இலங்கையில் தொடர்ந்தும் பொதுமக்கள் காணாமல் போவது குறித்தும், மனித உரிமைகள் மீறப்படுவதும் குறித்தும் விசாரணைக் கமிஷன் ஒன்றை உடனடியாக நியமிக்குமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும், ஐரோப்பிய பொருளாதார சமூகமும் அரசை வற்புறுத்தியுள்ளன.

இதையடுத்து ஏழு பேர் கொண்ட குழு ஒன்றை இலங்கை அரசு நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. நாடு முழுவதிலுமிருந்துவரும் புகார்

[4-ம் பக்கம் பார்க்க]

## செட்டிபாளையத்தில் 12 தமிழர்கள் வெட்டிக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டிருப்பு தொகுதியில் செட்டிபாளையம் என்ற இடத்தில் 12 தமிழர்களின் சடலங்கள் வெட்டுக்காயங்களுடன் கடலில் மிதந்துவந்த தோணியிலிருந்து மீட்கப்பட்டது.

உருக்குலைந்த நிலையிலிருந்த இச்சடலங்கள் பொதுமக்களி

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சுத்தமான வேப்பெண்ணை விற்பனைக்குண்டு போத்தல் ஒன்று விலை ரூ. 80/- மட்டுமே இணுவில், திருநெல்வேலி, யாழ் ஆஸ்பத்திரிவீதி அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற் யாழ்ப்பாணம். (ஏ 903)

### பரீட்சை (ஆண்டு 5)

புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப்பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 9 - 12 - 90 ஞாயிறு மு. ப. 8,00 மணிக்கு 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், அரசடி, கொக்குவில் மேற்கு (மக்கள் வைத்திய சாலைக்கு முன்பாக) ஆகிய முகவரிகளில் நடைபெறும். நடந்து முடிந்த புலமைப்பரிசில் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். (சி4157)

### சனசமூக நிலையங்களுக்கு

மீரா வெளியீடுகள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர், (சி-4156)


# பலாலியிலிருந்து விஞ்ஞான ஆசிரிய பயிற்சி அட்டாளசேனைக்கு மாற்றம்

**- பலத்த கண்டனம் -**

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான ஆசிரியர் பயிற்சியை, பலாலியிலிருந்து அட்டாளைச்சேனை முஸ்லிம் ஆசிரிய கலாசாலைக்கு இடமாற்றம் செய்ய மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையான ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

இம்முயற்சியைக் கைவிட்டு, விஞ்ஞானப் பயிற்சியைப் பலாலி ஆசிரிய கலாசாலையிலேயே தொடர்ந்து நடைபெற ஆவன செய்யுமாறு கல்வி அமைச்சை இச்சங்கம் வற்புறுத்தியுள்ளது.

அத்துடன் தற்போதைய சூழ்நிலையில் அடுத்த ஆண்டு ஆசிரிய பயிற்சித் தேர்வுக்கான நேர்முகப் பரீட்சையைக் கொழும்பில் நடத்தாது சம்பந்தப்பட்ட ஆசிரிய கலாசாலைகளிலேயே நடத்துமாறும் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்தால் கல்வியமைச்சுக்கு அனுப்பப்பட்ட அவசரச் செய்தியில், ''தற்போதைய அரசியல் நெருக்கடி மிகுந்த நிலையில் தமிழர் ஆசிரியர்கள், முஸ்லிம் ஆசிரிய கலாசாலைகளில் கல்வி பயிலுவது முற்றிலும் முடியாத விடயம் எனவும், அமைச்சின் செயல் தமிழரின் கல்விக்கு எதிரான திட்டமிட்ட செயல்'' எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள், கொழும்புக்கு நேர்முகப் பரீட்சைக்காகச் செல்வதற்குப் பாதுகாப்பான போக்குவரத்துச்சேவை இல்லை என்பதையும், போக்குவரத்துச் செலவாக ஆசிரியர்கள் 2 மாத வேதனத்தை செலவு செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படுமென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (153)

# இழுபறி நிலையில் 4ம்கட்ட நிவாரணம்; இடம்பெயர்ந்தோர் பாதிப்பு

(காங்கேசன்துறை)

இடம் பெயர்ந்தோர்க்கான 4ம் கட்ட நிவாரணம் இழுபறி நிலையில் இருந்து வருவதால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான 3ம் கட்ட நிவாரணம் வழங்கப்பட்டு ஒரு மாதம் சென்றுவிட்ட நிலையில் 4ம் கட்ட நிவாரணமும் இழுபறி நிலையில் இருப்பது குறித்து அவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

4ம் கட்ட நிவாரணத்திற்கு புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படுகின்றன. போதிய பங்கீட்டு அட்டைகள் இல்லாமையால் பல பகுதிகளிலும் இந்த அட்டைகளை விநியோகிப்பது பூர்த்தி செய்யப்படவில்லை.

நவம்பர் 30ம் திகதிக்குள் 4ம் கட்ட நிவாரணம் பூர்த்தி செய்யப்படவேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்ட போதும் இதுவரை இடம் பெயர்ந்தவர்கள் பலர் தமது நிவாரணத்தை பெற்றுக் கொள்ளமுடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## மக்கள் உதவி

(கிளிநொச்சி)

மாங்குளம்இராணுவமுகாம் தாக்குதலில் மக்கள் பெரும் ஆதரவை வழங்கினார்கள் என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பாண்டியன் குளம் பிரதேசப்பொறுப்பாளர் திரு. பிரசாந் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திரு. பிரசாந் மேலும் தெரிவிக்கையில்: மாங்குளம்பாண்டியன் குள பிரதேச மக்கள், முகாம் தாக்குதல் வெற்றிக்காக பாடுபட்டதுடன் பெரும் தொகையாக உணவு வகைகளையும் தந்தார்கள். இவர்களின் முன்மாதிரியை அனைவரும் பின்பற்றவேண்டும் என்றார். (83)

# 25 வருடம் பணியாற்றிய ஊழியருக்கு பொற்கிளி வழங்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து 25 வருட காலம் சேவையாற்றி வரும் ஊழியர்களுக்கு சங்கம் நடாத்திய மாவீரர் தினவிழாவில் பாராட்டு சான்றிதழ்களும் பொற்கிளியும் வழங்கப்பட்டது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு இச்சங்கம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் சங்கத்தலைவர் திரு. க. கந்தசாமி தலைமையில் கடந்த திங்கட்கிழமையன்று மாலை நடாத்திய விழாவில் பெரும் தொகையான மக்கள் கலந்துகொண்டனர். சண்டிலிப்பாய் வட்ட அவைத்தலைவர் திரு. சவரிப்பிள்ளை, இயக்குநர் சபை உறுப்பினர் ஆசிரியர் பொ. கந்தசாமி, பண்டத்தரிப்பு பிரதேச பொறுப்பாளர் திரு. தூரசு, ஆசிரியர் குகதாசன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

சங்க பொதுமுகாமையாளர் திரு. சு. வைரவநாதன் உரையாற்றினார்: திரு. சி. ஏ. பங்கிராஸ் நன்றியுரை நிகழ்த்தினார்: இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (72)

## மாவீரர் சனசமூகநிலையம்

(ஏழாலை)

யாழ்ப்பாணம் அராலி வீதி புதிய குடியிருப்புச் சனசமூக நிலையம் என இயங்கிவந்துள்ள சனசமூக நிலையம் மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர் சனசமூக நிலையமென திறந்து வைக்கப்பட்டது,

## இராசி பலன்

**1-12-1990**

**சனிக்கிழமை**

சதுர்த்தசி: பிற்பகல் 4-41 வரை; கார்த்திகை பின்னிரவு 4-28 வரை. அமிர்தயோகம், திருக்கார்த்திகை விரதம், இராகுகாலம் காலை 9-14முதல் 10-44 வரை. நல்ல நேரம் மாலை 3-14 முதல் 4-44 வரை.

மேடம்: காரிய பலிதம், பயணங்களால் நன்மை, குடும்பத்தில் குதூகலம். சகோதர உதவி. புதிய பதவி.

இடபம்: குடும்ப விரோதம். கருத்து மோதல். தொழிற் போட்டி. அந்நியர் தலையீடு.

மிதுனம்: தொழில் மாற்றம் குடும்ப அமைதி. புத்திரர் மகிழ்ச்சி; கடன் வரவு.

கடகம்: எதிர்பாராத தொல்லை. ஏக்கப் பெருமூச்சு. வீண் சந்தேகம்: பொருள் கஷ்டம்.

சிங்கம்: குழம்பிய நிலை. பரிதாப உணர்வு: தொழிற் கஷ்டம். குடும்பக் கவலை.

கன்னி: நோய் வாட்டும். மனச் சுமை. குடும்பத்தில் தகராறு. தொழிற் குறை. பணக் கஷ்டம்.

துலாம்: தொழில் லாபம். விநோத எண்ணம், அதிகாரிகள் பாராட்டு. குடும்ப மகிழ்ச்சி;

விருச்சிகம்: எதிர்பாராத முடிவு. பயணம். பொருளாதார மேம்பாடு: புதிய உறவு. புகழ்;

தனுசு: பெரியோர் பகை வீண் குழப்பம், குடும்பப்பிரிவு. தொழில் தகராறு. பண முடக்கம்;

மகரம்: கடும் போக்கு. கற்பனை. குடும்பத்தில் அமைதியின்மை. காரியத் தடை.

கும்பம்: வீட்டில் சுப காரியம். எதிரிகள் உதவி. இனசன வருகை. அந்நிய வாசம்;

மீனம்: நம்பிக்கையின்மை. பணியாள் சகாயம். தற்பெருமை. குடும்பக் கஷ்டம்.

-ஜோஸ்யர்


## 31-ம் நாள் நினைவஞ்சலி

### சந்தியா செபஸ்ரி பிரான்சிஸ்



பிறப்பு: 03-04-1931

இறப்பு: 02-11-1990

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் உயிர் வாழ்வான்.''

இவரின் ஆத்ம சாந்திக்காக யாழ். அடைக்கல நாயகி ஆலயத்தில் 02-12-1990 ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மன்றாட வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருற்று வருந்தும்

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

3, 5-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (ஏ 906)

## ஓராண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 17-04-1925

மரணம்: 12-12-1989

திதி: 01-12-1990

### அமரர் நடராசா கனகலிங்கம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர்)

''உமது நினைவலைகள் என்றும் எமை விட்டு நீங்கா''

குடும்பத்தார்,

நீர்வேலி மத்தி, நீர்வேலி. (எ-901)

## வரி விளம்பரம்

### ரதி வாச் வேக்ஸ்

எமது நிறுவனம் இன்று முதல் 45, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றதென்பதை அறிவித்துக் கொள்கிறோம். ரதி வாச் வேக்ஸ் 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-4150)

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி-2158)

## COMPUTER CLASSES

புதிய இடத்தில்

மீண்டும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

16-12-90 காலை 9 00 மணிக்கு

**UNIKCO COMPUTER CENTRE**

37, (351) CLOCK TOWER ROAD, JAFFNA

(A 907)

## A/L 90, 91, 92

### விஞ்ஞான பாடங்கள்

ஆரம்பம்:

02 - 12 - 90 முதல்

காலை 9 மணிக்கு

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

**New Master Institute**

**BMC Lane. - Jaffna.**

ஏ 899)

## தமிழினத்துக்கு பெருதவி!

மனிதன் தன் மனிதத்துவத்தை மறந்து வரம்பு மீறி தவறிழைப்பதைத் தடுத்து நிறுத்தும் உறுதிகொண்ட நோக்குடன் காலாகாலமாக உருவாக்கப்பட்டு வளர்ந்தவைகளே சட்டங்களாகும்.

மனித வரலாற்றுக்கு முற்பட்ட காலம்முதல் சகல சட்டங்களும் சம்பிரதாயங்களும் அந்தந்த சமுதாயத்தின் தன்மைக்கேற்ப பின்தொடரும் நிழல்களாக வளர்ந்தும், தேய்ந்தும், மறைந்தும் வளர்ந்துள்ளன.—

''சட்டம் ஒரு கழுதை'' என்பது சட்டத்தரணிகளுக்கும், சட்ட அறிஞர்களுக்கும், தர்க்க - தத்துவார்த்த ரீதியில் நன்கு விளங்கும்.

ஆனால் இன்றோ இவர்களையும், விஞ்சி, அரச சட்டங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தவென சில வர்த்தகர்கள் காத்துக் கிடக்கின்றனர்.

கனவிலும் நனவிலும், பணம் புரட்டல், திரட்டல், சேர்த்தல், பதுக்கல் என்ற ஆவலுடன் வர்த்தக வியாபார போர்க்களத்தில் கத்தியின்றி இரத்தமின்றி சத்தமின்றி சமர்புரிந்து வரும் சில வியாபாரிகளுக்கு சட்டம் ஒரு கழுதையல்ல— தாம் நினைத்தளவு பணத்தை வாரிச் சுருட்டி கொள்ளை லாபம் அடிக்கும் அதிவேக பயணத்துக்கு தக்க சந்தர்ப்பத்தில் வந்து உதவும் லாபக் குதிரையாகும்.

தமிழ் இனத்தையே வாட்டி வதைக்க எத்தகைய சட்டங்களையும் சளைக்காமல் தாக்கமாக அமுல் நடாத்த சிங்கள அரசாங்கம் துடித்துநிற்கும் இவ்வேளையிலும் வர்த்தக, வியாபாரக் குதிபோடும் – சில வியாபாரிகள் அரசாங்கம் தினமும் இடும் அவசர கால சட்டங்கள், ஊரடங்கு உத்தரவுகளை தமக்கு சாதகமாக பயன்படுத்த நிற்கும் துடிப்பைக் கண்டால் இவர்களும் தமிழர்கள்தானா? என்று ஏங்கத் தோன்றுகின்றது.

நள்ளிரவு முதல் ஊரடங்கு உத்தரவு என்றுவ் விடியற்காலைவிடிவெள்ளி பூக்கும் முன்னரே சில கடைகளின் பொருட்களின் விலைகள் குதிரைப்பாய்ச்சலில் குதிபோடும்!

அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெ ஆகிய அத்தியாவசிய பண்டங்கள் முதல் 'அங்கர்', லக்ஸ்பிறே போன்ற குழந்தைகள 'தவிப்பு' மா வரை அனைத்தினதும் விலைகளும், விலைப் பட்டியல் என்ற மரத்தின் உச்சாணிக் கொப்புக்கு உயர்த்தப்பட்டு விடும்.

ஊரடங்கு உத்தரவுக்கு காத்து கிடந்து ஊறிய கொள்ளை லாபம் அடிக்க தவம் கிடக்கும் சில வர்த்தகர்கள் கொஞ்சக்காலமாவது அரசாங்க சட்டங்களை தமக்கு சாதகமாக்கத் துடிக்கும் பிரஜைகளாக இருக்க மறந்து தமிழர்களாக இயங்க முன்வரவேண்டும்.

அதுவே நெருக்கடி மிகுந்த இக்கால கட்டத்தில் தமிழினத்துக்கு காலத்தின் கண் செய்த பெருதவியாகும்!

— மயூரன்

# அந்நிய ஆக்கிரமிப்பால் சிதறிக்கிடக்கும் சுதந்திர 'குவைத்'தின் பெரும் அவலம்

சுதந்திர குவைத் இன்று ஈராக்கிய படைகளால் சின்னா பின்னப்பட்டு சீரழிந்து கிடக்கிறது. இங்கு சகல சுகபோகங்களுடன் வாழ்ந்த இருபது லட்சம் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்பால் சின்னா பின்னமாக சிதறி நாடுகடத்தப்பட்டுள்ளனர். எஞ்சியவர்களோ, சித்திரவதை செய்யப்பட்டு கேவலமாக நடாத்தப்படுகிறார்கள். குவைத் தேசிய கொடியை, வைத்திருந்தாலோ, குவைத் மன்னரின் படங்களை மாட்டியிருந்தாலோ, பெண் ஆண் என்ற பேதமின்றி கொலை செய்கிறார்கள். குடித்தொகையில் பத்துசதவிகிதமானோர்

## சொந்த மண்ணின் அந்நியராக அடிபட்டுக் கிடக்கும் மக்கள்

மானபங்கம் செய்யப்பட்டு கொடுமைகளைச் சந்தித்துள்ளனர்.

அமெரிக்கா குவைத்தை எந்நேரமும் கைப்பற்றலாமென நான்கு லட்சம் ஈராக்கிய துருப்புக்கள் சின்னஞ்சிறிய நாட்டில் நிலைகொண்டிருக்கின்றன. பாடசாலைகள், அரசாங்க கட்டிடங்கள் அனைத்தும் சித்திரவதை முகாம்கள். ஈராக்கிய படைகளைக்கண்டு முகம் சுளிக்கும் குவைத் மக்களின் உடமைகள் ஈராக்கிய படைகளால் சூறையாடப்பட்டு இராணுவ வாகனங்களில் ஏற்றப்பட்டு ஈராக்கிற்கு கொண்டு செல்லப்படுகின்றன. வங்கிகளில் வைக்கப்பட்டிருந்த ஏழு லட்சத்துக்கும் அதிகமான டொலர் பணம் அங்கு ஈராக்கிய படைகளால் சூறையாடப்பட்டுள்ளன. ஐயாயிரம் வீடுகள், கடைகள் தகர்க்கப்பட்டுள்ளன.

குவைத்தில் குவிக்கப்பட்டிருக்கும் படைகளுக்கு போதிய உணவை ஈராக் அரசு வழங்காமையால் குவைத்மக்கள் வைத்திருக்கும் உணவை சர்வாதிகாரப்பாணியில் வீடுகளுக்குள் புகுந்துகொள்ளையிட்டு உண்ணுகிறார்கள். எந்தப்பக்கம் திரும்பினாலும் ஈராக்கிய படைகளே காட்சிதருவதால், மக்கள் வெளியில் வருவதற்கு அஞ்சி உள்ளேயே இருந்து வருகிறார்கள்.

குவைத்தில் இருந்து தப்பி வந்த தாய்லாந்து நாட்டுப்

ஸச்சி

பிரஜை ஒருவர் தகவல் தருகையில் இஸ்லாமிய மதம் போதிக்கும் சகோதரத்துவத்தை அங்குகாணமுடியவில்லை. குவைத்மக்களை ஈராக்கியபடைகள் அந்நியரைப் போல நடாத்துகின்றன. நான் நேரில் கண்ட காட்சிகள் மனித உரிமைகளை எவ்வாறு கொச்சைப்படுத்துகிறார்கள்'' என்று வேதனையுடன் கூறியுள்ளார்.

உல்லாசமாக சுகபோக வாழ்வை அனுபவிக்க குவைத் மக்கள் இன்று மனித நேயத்தைக்காணமுடியாத சித்திரவதைக்குள்ளாகி முடங்கிக் கொண்டு வாழ்கிறார்கள்.

சின்னஞ்சிறிய நாடான குவைத் மீது ஈராக் ஆக்கிரமித்து நான்கு மாதங்கள் முடிந்துவிட்டன. இச்செயலை உலகம் முழுவதும் கண்டித்து வருகின்றன, ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனோ ''குவைத் ஈராக்கின் ஒருபகுதி. எமது மண்ணை மீட்டுள்ளோம்'' ஈராக்கின் பத்தொன்பதாவது மாநிலம் குவைத் என ஈராக்கின் வரைபடத்தையேமாற்றியமைத்துள்ளார்.

ஈராக்கின் அத்துமீறிய செயலைக் கண்டித்த ஐ. நா. நிறுவனம் ஈராக் மீது பொருளாதார தடைகளை விதித்துள்ளது. அமெரிக்கா சவூதி அரேபியாவை பாதுகாக்கப் போவதாக நான்கு லட்சம் துருப்புக்களை மத்தியதரைக் கடலுக்கு அனுப்பிவைத்துள்ளது. அமெரிக்காவுக்கு ஆதரவாக பல்லாயிரக்கணக்கான துருப்புக்களை ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ், கனடா உட்பட பல நாடுகளும் அனுப்பிவைத்துள்ளன.

ஈராக்கிய படையெடுப்பை தவிர்த்து, குவைத்தில் மன்னர் ஆட்சியை ஏற்படுத்த பன்னாட்டுத் தலைவர்களும் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஈராக் பிடிவாதமாக குவைத்திலிருந்து தனது படைகளை வாபஸ் பெற மறுத்துவருகின்றது.

**வியட்நாமில் அமெரிக்கா கற்ற பாடம் ஈராக்கிற்கு ஒரு படிப்பினையாக அமைய வேண்டும், ஆனால் ஈராக் இதனை உணர்வதாக தெரியவில்லை.**

இந்நிலையில் மத்திய கிழக்கு நாடுகளில் போர் எந்நேரமும் வெடிக்கலாமென்பது உறுதியாகிவிட்டது. அமெரிக்கா தனது போர் ஒத்திகைகளை ஆரம்பித்துவிட்டது, ஈராக்கிய ஜனாதிபதியும் தமது படைகளுக்கு போருக்குத் தயாராகுமாறு அறைகூவல் விடுத்துள்ளார். இந்நிலையில் போரை யார் ஆரம்பிப்பது என்பது தான் கேள்விக்குறியாக உள்ளது. போர் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே இப்போர் நீதியான போர், மண்ணாசை பிடித்த ஜனாதிபதி ஹுசைனுக்கு எதிரான போர் என உலகம் முழுவதும் வாழும் மக்கள் கூறிக்கொள்கிறார்கள்.

1939-ல் ஆரம்பமான போர் உலக வரலாற்றிலே நீதியான போராகக் கருதப்படுகிறது. கொடுங்கோல் ஆட்சியாளரான ஹிட்லருக்கு எதிராக துவக்கப்பட்ட போராக ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் பேசப்படுகிறது. மனித குலத்துக்கு அச்சுறுத்தலாக எந்த நாடும் ஆக்கிரமிப்புச் செய்வதை அன்றே உலகம் தட்டிக் கேட்டது.

இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா தென் வியட்நாம் மீது போர் தொடுத்தது. இப்போரில் [illegible]6,000 அமெரிக்க துருப்புக்கள் கொல்லப்பட்டனர். மூன்று லட்சம் அமெரிக்கத் துருப்புக்கள் காயமடைந்தனர். மூன்றரை லட்சம் தென் வியட்நாமியர் கொல்லப்பட்டனர். போரில் பெருமளவில் நச்சு ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன. உலக நாடுகளில் கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்காகவே இப்போர் ஆரம்பமானது. இருபத்தைந்து வருடப்போரில் எதுவித பலனையும் காணமுடியாத அமெரிக்கா துருப்புக்களை வியட்நாமிலிருந்து வாபஸ் பெற்றது. போர் முடிந்தது, போரினால் விளைந்த அனர்த்தங்களும், மனித உயிர் இழப்புக்களும் மனித குலத்துக்கே அச்சுறுத்தலாக அமைந்தன.

ஆனால் இப்போரை நீதியான போராக எவரும் கருதவில்லை. உலக நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டு தோல்வியை நாடியதாக உலகம் விமர்சனம் செய்தது. ஆனால் இன்றைய ஈராக் -அமெரிக்க யுத்த அபாயம் நீதியான போராக உலகம் முழுவதும் பேசப்படுகிறது.

ஆக்கிரமிப்பாளர்களை நல்வழிக்குத் திருப்பும் புனிதப் போராக விடுதலையை விரும்பும் மக்கள் எண்ணுகிறார்கள். இப்போர் அவசரமாக எடுக்கப்படப்போகும் நடவடிக்கையாக அமையாது எனலாம்.

## வீதிகளுக்கு மாவீரர் பெயர்

(கிளிநொச்சி)

மாவீரர் தினத்தின்போது கிளிநொச்சி நகரில் முன்னாள் கிளிநொச்சிமாவட்ட அரசியல் பொறுப்பாளர் மாவீரர் வண்ணன் பெயரில் வீதியொன்று திறந்துவைக்கப்பட்டது. பரவிப்பாஞ்சானில் முன்னாள் எம்பியான சிவசுந்தரம் வீதிக்கே வண்ணன் (கலைஜீவன்) வீதி என பெயர் சூட்டப்பட்டது.

கிளிநொச்சி நகர் சிற்றூர் அவைத் தலைவர் திரு. இ. சரவணபவானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மாவீரர் வண்ணனின் தந்தை மு. சீவரெத்தினம் வீதியைத் திறந்துவைத்தார்.

கிளிநொச்சி நகரில் மாவீரர் கமல், பனா ஆகியோரின் பெயரிலும் வீதிகள் திறந்துவைக்கப்பட்டது.

### சங்கானையில்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திற்கு சமீபமாகவுள்ள வீதிக்கு 'இவான் வீதி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தொட்டிலடியிலுள்ள விவசாயக் காணிகளுக்குச் செல்லும் வீதிக்கு செந்தில் வீதியென்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள மற்றுமொரு வீதிக்கு 'சீலன் வீதி, என்று பெயரிடப்பட்டுள்ளது. (72)

### ஆனைக்கோட்டையில்

ஆனைக்கோட்டையிலுள்ள இரு பிரதான வீதிகளுக்கு 'மேஜர் கணேஸ்' வீதி, 'கப்டன் வினோத்' வீதிஎன பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### பன்னாலையில்

(மானிப்பாய்)

மாவீரர் தினத்தையொட்டி பன்னாலை கிராம சிற்றூரவையினரால் சிரமதான மூலம் வீரமரணமடைந்த போராளி மேஜர் கண்ணனின் நினைவாக 'ரஞ்சன் வீதி' என்று பெயர் சூட்டப்பட்ட வீதியொன்றும் அவரது தாயாரால் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (71)

### பண்டத்தரிப்பில்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பிலுள்ள கேணிக்கட்டு ஒழுங்கைக்கு 'மேஜர் தும்பன் வீதி' என்று பெயரும், மாரீசன் கூடல் சந்தியிலிருந்து செல்லும் வீதிக்கு 'தனேஸ்வரன் வீதி' என்று பெயரும் சூட்டப்பட்டுபெயர் பலகை திறந்துவைக்கப்பட்டுள்ளது. (72)

### வட்டுக்கோட்டையில்

(வட்டுக்கோட்டை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டைப்பிரதேச முன்னாள் பொறுப்பாளராக இருந்து வீரமரணமடைந்த பிரசாத்தின் பெயர் வட்டுக்கோட்டை கிழக்கிலுள்ள தாவளை வீதிக்குச் சூட்டப்பட்டுள்ளது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டைகிழக்குச் சிற்றூரவைத் தலைவர் திரு. நா, சிவசுப்பிரமணியம் தலைமையில் இப்பெயர் சூட்டு விழா நடைபெற்றது. [139]

### யாழ். நகரில்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி அநேக வீதிகள் வீரமரணமடைந்த போராளிகளின் நினைவாக பெயர் சூட்டப்பட்டுள்ளன. யாழ். ஆஸ்பத்திரிக்குப் பின்புறமுள்ள விக்டோறியா வீதி கப்டன் நரேன் வீதி எனவும், திருநெல்வேலி சென்ரல் நேர்சிங் ஹோம் முன்பாகவுள்ள வீதி மேஜர் கணேஷ் வீதி எனவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### காரைநகரில்

(காரைநகர்)

காரைநகர் நீலிப்பந்தனை பகுதியில் வீரமரணமடைந்த போராளிகள் ஞாபகார்த்தமாக நீலிப்பந்தனை வீதிக்கு தனபாலன் வீதியென்றும், மருதடி வீதிக்கு ஹேமானந் வீதியென்றும், நீலிப்பந்தனை வீதிக்கு கண்ணன் வீதியென்றும் வீரமரணமடைந்த போராளிகளின் பெற்றோர்களால் பெயர்சூட்டப்பட்டது

## தடுக்க நடவடிக்கை

(லக்னோ)

இந்தியாவில் தொழுநோயை முற்றாக நீக்குவதற்குச் சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. புதிய திட்டப்படி 2000 ஆண்டிற்கு முன் தொழுநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குப் பூரண சிகிச்சை வழங்குவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்தலாமென அமைச்சு அறிவித்துள்ளது; (ச)

## கட்டாக்காலி நாய்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து, அவை மக்களைக் கடிப்பதால் இதுவரை பலர் மரணமடைந்துள்ளதுடன் தகுந்த மருந்துவகை இல்லாமல் அல்லல்படுகின்றார்கள். இந்நிலையில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தவேண்டியுள்ளதால் நாய்கள் வளர்க்கும் உரிமையாளர்கள் தங்கள் நாய்களை வீட்டில் கட்டி வளர்ப்பதுடன் வளர்ப்பு நாய் என்பதற்கு அடையாளமாகக் கழுத்துப் பட்டியை நாய்க்கு அணிவித்தல்வேண்டும்:

கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கை எம்மால் 1990-12-05 இல் இருந்து மேற்கொள்ளப்படும்; அடையாளமற்ற நாய்களைப் பிடித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அல்லது பிரிவு செயலகத்தில் ஒப்படைத்து ஒரு நாய்க்கு 5 ரூபா வீதம் பெற்றுக்கொள்ளலாம். தமிழீழ மக்களனைவரையும் இது விடயத்தில் ஒத்துழைக்கும்படி யாழ். மாவட்டச் செயலகம் கேட்டுக்கொள்றது. (வி)

# ★ குவைத்திலிருந்து வெளியேற ஈராக்கிற்கு காலக்கெடு இல்லையேல் யுத்தநடவடிக்கை

(நியூயோர்க்)

குவைத்திலிருந்து ஈராக்கிய படைகள் 91ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதிக்குள் வெளியேறுவிடின் அதன்மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள ஐ. நா. சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

ஐ. நா. சபை நேற்றுமுன்தினமிரவு கூடியபோது இதற்கான தீர்மானத்தை அமெரிக்கா முன்வைத்தது. பல மணி நேரம் நடைபெற்ற விவாதத்தின் பின் வாக்கெடுப்பு நடைபெற்றது. 15 நாடுகள் இதில் கலந்துகொண்டன.

படையெடுப்பு தீர்மானத்திற்கு ஆதரவாக 12 வாக்குகளும் எதிராக இரு வாககுகளும் (கியூபா, ஜேமன்) கிடைத்தன. சீனு வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதபோதிலும்வெட்டுவாக்கை(வீட்டோ பயன்படுத்தாததும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரச்சனையை பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்த்துக்கொள்ள விரும்புவதாக ஈராக் அறிவித்த கடைசிக்கோரிக்கையையும் அமெரிக்கா நிராகரித்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜோன் மேஜர், பிரிட்டிஷ் அரசின் ஈராக தொடர்பான கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை என அறிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுக்லா இப்பிரச்சனை சமாதானமுறையில் தீர்த்துக்கொள்ளப்படுமென் பதில் தனக்கு நம்பிக்கையுண்டு என்று கூறினர்:

பிரான்ஸ் அதிபர் மித்திரோங் ஈராக் தனது நிலையை தவிர்த்துக்கொள்ள இதுவே கடைசிச் சந்தர்ப்பம் என தெரிவித்தார். (சி)

# வயோதிபமாது உணவில் நஞ்சூட்டிக் கொலை

(வேலணை)

வேலணையில் வயோதிப மாது ஒருவர் உணவில் நஞ்சு கலந்து கொல்லப்பட்டார்.

வேலணை சாட்டியைச் சேர்ந்த திருமதி நாகம்மா கதிரவேலு (65 வயது) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவர்.

நேற்று முன்தினம் காலை வழமைபோல பழைய சோற்றை பிழிந்துசாப்பிட்டு படுத்த இவர் மாலைவரையும் எழும்பவில்லை. இதனால் சந்தேகம் கொண்ட உறவினர்கள் சென்றுபார்த்த பொழுது இவர் இறந்திருக்கக் காணப்பட்டார்.

இவருடன் சோறு சாப்பிட்ட பூனை, நாய், கோழி போன்றவையும் இறந்து கிடந்தன.

கடந்த வருடமும் இதே போல இவருடைய கணவன் சாப்பிட்ட மீன் குழம்பில் நஞ்சு கலந்திருந்தமையினால் கணவன் இறந்தது குறிப்பிடத்தக்கது.

இவரின் மரணத்தோடு சம்பந்தப்பட்டோர் என்ற சந்தேகத்தின் பேரில் விடுதலைப் புலிகளினால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# 4ம் கட்ட உணவுவிநியோகம் 15-ம் திகதி வரை நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட மக்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 4-ம் கட்ட இலவச உணவு விநியோகம் இம்மாதம் 15-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டத்தில் மேற்படி முடிவு செய்யப்பட்டது.

இதேநேரத்தில், நேற்று யாழ். நகரிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மக்கள் கூட்டம் அதிகரித்து இருந்ததைக் காணக் கூடியதாகவிருந்தது.

முன் அறிவிப்பின் படி நேற்று 4-ம் கட்ட உணவு விநியோகத்தின் கடைசி தினமாக இருந்தபடியால், கடைசி நேரத்தில் உணவு விநியோக அட்டைகளைப் பெற்றவர்கள் தமது உணவுப்பொருட்களைப் பெறுவதற்கு நீண்ட நேரம் காத்திருந்தார்கள்.

தமது வீடுகளுக்கு அருகாமையிலுள்ள தனியார் கடைகள் அனைத்தும் தடைசெய்யப்பட்டதினால், தமது பொருட்களை தொலைவில் இருக்கும் பலநோக்குக் கூட்டுறவுக் கிளைகளில் நீண்டநேரம் காத்து நின்று போராடவேண்டிய அவலநிலை குருநகர், திருநகர் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை நான்கு வாரங்களுக்கு இலவச உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் விசேட திட்டம் இன்று முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வி-153)

# 11,000 ஊழியர்கள் ஓய்வுபெற்றுள்ளனர்

(கொழும்பு)

சுய விருப்பத்தின்பேரில் ஓய்வுபெறும் திட்டம் அமுல்படுத்தப்பட்டபின் நாடுமுழுவதும் 11,000 ஊழியர் போக்குவரத்துசேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான சேமலாப நிதியை 45 நாட்களுக்குள் கிடைக்கக்கூடியதாக புதிய திட்டமும் அமுலாகியுள்ளது. அதற்கானஏற்பாடுகளும்மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பலதுறைகளிலுமாக நாடு முழுவதும் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் சுய விருப்பின்பேரில் ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இன்று திருக்கார்த்திகை

(கொழும்புத்துறை)

இந்துக்கள் நாடெங்கும் கொண்டாடும் திருக்கார்த்திகை விரத விளக்கீடும், சர்வாலய தீபமும் இன்று சனிக்கிழமை மாலை சகல இந்து ஆலயங்களிலும், இல்லங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. (154)

## ஊரடங்கு நீக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் இன்று காலை ஐந்து மணியில் இருந்து ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார், வவுனியா, வவுனியா தெற்கு ஆகிய இடங்களில் நேற்றுக் காலை ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. (ச)

## துணுக்காய்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விமானங்களும் கடும் பீப்பாக் குண்டுத் தாக்குதலை இப்பகுதியில் மேற்கொண்டன.

துணுக்காயில் ஒரு பீபபாக் குண்டும், மல்லாவியில் ஐந்து பீப்பாக்குண்டுகளும் வெடித்து பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. (க)

## செட்டிபாளையந்தில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

னால் மீட்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் வெட்டிக்கொல்லப்பட்டவர்களின் சடலங்களே தோணியில் மிதந்துவந்ததாக அங்கிருந்துவந்தவர்கள் தெரிவித்தனர். (ரி)

## மனித உரிமைகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் பரிசீலிக்கப்படும் என்றும் குழு அறிவித்துள்ளது.

இவ்வாறான குழுவொன்று உடனடியாக அமைக்கப்படவேண்டுமென்று மேற்படி அமைப்புகள் அரசைப் பல தடவைகள் வற்புறுத்திவந்தபோதும் நேற்றுத்தான் இக்குழு அமைக்கப்பட்டது. (சி)

## முஸ்லிம்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யமர்த்தப்படவுள்ளனர்.

கடந்த ஜூன் 11-ம் திகதிக்குப் பின்னர் இங்குள்ள தமிழர்கள் அனைவரும் சிங்கள இராணுவத்தினராலும், முஸ்லிம் காடையர்களாலும் அடித்து விரட்டப்பட்டார்கள்.

முஸ்லிம்மக்களைக் குடியேற்றுவதற்காக மேற்குறிப்பிட்ட தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம் ஊர்காவற் படையினரும், சிங்கள இராணுவத்தினரும் இணைந்த கூட்டுமுகாம் அமைக்கப்பட்டு வருகிறது. (ரி)


# ST. PATRICK'S COLLEGE JAFFNA

## பிரவேச விண்ணப்பம் - 1991

பின்வரும் வகுப்புகளுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| முதலாம் வருடம்: | 01-02-85 — 31-01-1986 க்குள் பிறந்திருக்கவேண்டும். | |
| நாலாம் வருடம்: | 1982 | இல் பிறந்திருக்கவேண்டும் |
| ஆறும் வருடம்: | 1980 | ,, ,, |
| ஒன்பதாம் வருடம்: | 1977 | ,, ,, |

★ விண்ணப்பப்பத்திரம் ரூபா 30.00 (பரீட்சைக் கட்டணம் உட்பட) 03-12-90 தொடக்கம் 20-12-90 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 28-12-1990 திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9-00 தொடக்கம் 12 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ தபால் மூலம் வரும் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

★ பிரவேசப் பரீட்சைத்தினம் 07-01-1991 காலை 8.30 மணிக்கு.

★ 6 ஆம், 9 ஆம் வருட வகுப்புகளுக்கு நடாத்தப்படும் பிரவேசப்பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் பத்துவீத மாணவர்களுக்கு கடந்த வருடம் போல் யாழ். ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

கல்லூரி அதிபர்

(908)


# ஊதியம் வழங்காததன் எதிரொலி: கப்பலிலிருந்து பொருள்கள் இறக்குவதில் தாமதமாகும்

(வடமராட்சி)

கப்பலில்வரும் பொருட்களை இறக்குபவர்களுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படாததினால் இறக்குமதி இடைநிறுத்தப்படவிருக்கிறது.

இறக்குமதி இடைநிறுத்தத்திற்கான முன்னறிவித்தல் யாழ். அரச அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவிக்கிறது.

கடற்கொந்தளிப்பு, சீரற்ற இறங்குதுறை, இதன்மத்தியிலும் யாழ். அரச அதிபரின் வேண்டுகோளின் பேரிலும் மக்களின் நன்மைகருதியும் கொழும்பில் இருந்து யாழ். வரும் உணவுக் கப்பல்களைப் பொறுப்பேற்று பொருட்களை பருத்தித்துறையினூடாக மேற்படி சங்கம் இறக்கிவருகின்றது.

எனினும் இறக்கும்வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குரிய பணம் இதுவரை கொடுக்கப்படவில்லையாம்.

இம்முறைவந்த கப்பலில் பணம் வந்தும் மேற்படி தொழிலாளர்களுக்குரிய பணம் கொடுக்கப்படாமையால் தாம் இறக்கும்வேலையை இடைநிறுத்தப்போவதாக தெரிவிக்கும் கடிதத்தை யாழ். அரச அதிபர் பணிமனைக்கு கடந்த 28ம் திகதி புதன் கிழமை அனுப்பிவைத்துள்ளதாக பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சதாசிவம்காந்திதாசன் தெரிவித்தார். (51)

## அம்பாறை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆர். எம். மன்சூர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து சுமார்80,000 தமிழர்கள் இடம்பெயர்ந்து பிறமாவட்டங்களுக்கு சென்றுள்ளதும் தெரிந்ததே. (சி)

## திருமலை மாவட்டத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊழியர்களின் வெற்றிடங்களுக்கு உள்ளூர் சிங்கள குடியேற்றவாசிகளை நியமிப்பதற்கான துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகிறது.

கடந்த ஜூன் மாதத்தில் திருமலையில் யுத்தம் ஆரம்பமானதையடுத்து பெருமளது தமிழ்க் குடும்பங்கள் திருமலையைவிட்டு வெளியேறியது தெரிந்ததே.

தொடர்ந்து அங்கு நிலவும் யுத்த நிலைமையினால் கடமைக்கு செல்ல தமிழ் ஊழியர்கள் அச்சம் கொண்டுள்ளனர். (153)

## ஒரே நேரத்தில்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதனால் மாணவர்கள் உட்பட 36 பேர் இராசகுளவியால் குத்தப்பட்டு சிலர் வீதியில் மயங்கி வீழ்ந்தனர். இவர்கள் ஆபத்தான நிலையில் மாட்டு வண்டியில் எடுத்துச் சென்று மூளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூன்று சகோதரிகளின் நிலைமை மோசமாக உள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. (154)

## மாவிட்டபுரத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டதில் இராணுவத்தினர் பலத்தசேதத்துடன் மீண்டும் முகாமுக்குள் சென்றனர்.

### வீரமரணம்

மேற்படி தாக்குதலில் விடுதலைப் புலிகள்தரப்பில் பெண் போராளியான பகனப்பிரியா (வன்னியசிங்கம் சுதா- வண்ணார்பண்ணை) வீர மரணமடைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். (வி)

## இரு தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை சங்கரப்பிள்ளை, எஸ். வடிவேல் ஆகியோர் தேங்காய் பிடுங்குவதற்காக முகாமுக்கு வெளியே சென்றபோதே ராணுவத்தால்கொடுமையான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## ஷெல் வெடித்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் ஒன்றை கண்டெடுத்த சிறுவனொருவன் அதன் மூடியைத் திறந்த பொழுது அது சிறுவனை உதைக்கவே அருகிலுள்ள வேலியை நோக்கி அதை எறிந்தானும். வீட்டு வளவொன்றினுள் ஷெல விழுந்து வெடித்ததில் விலலியம துரேசம்மா (63-வயது), டொன்ஸ்ரோ கொலின் அன்ரன் (4-வயது), ஜேசுதாசன் கொலின் (12-வயது) உட்பட நான்குபேர் படுகாயமடைந்தனர். (ரி)

## கிரிக்கெட் இன்று

(சென்னை)

இந்திய-இலங்கை அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நாக்பூரில் ஆரம்பமாகிறது. (வி)


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.